கல்யாண முகூர்த்தப் புடைவைகளின்
கைராசியான ஸ்தாபனம்
சீமாட்டி
ஜவுளி சமுத்திரம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கையர், ஆடவர்
மனதைக் கொள்ளை கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு,
பருத்தி புடைவைக் கடல்
சீமாட்டி
ஜவுளி சமுத்திரம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 10 சனிக்கிழமை (25 - 12 - 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 29

# இ.தொ.காவின் தலைமைப்பீடத்தில் வேகமாக வலுத்து வரும் பிணக்கு!

## தொண்டமானைக் கண்டித்து செல்லச்சாமி பகிரங்க அறிக்கை

கொழும்பு, டிசம்பர் 25

மலையகத் தமிழர்களின் பிரதான அரசியல் கட்சியும், தொழிற் சங்கமுமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமைப் பீடத்தில் ஏற்பட்ட பிணக்கு நாளாந்தம் வேகமாக வலுத்து வருகிறது.

மத்திய மாகாணசபையைச் சேர்ந்த பிரச்சினைக்குரிய இ.தொ.கா. உறுப்பினர்கள் ஏழு பேரையும் இடைநிறுத்தம் செய்வது என்ற தலைவர் தொண்டமானின் முடிவை —

பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி கண்டித்துப் பகிரங்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதற்காக அவர் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

மாகாணசபை உறுப்பினர்களின் கடத்தல் செய்தியைத் தொடர்ந்து இ.தொ.கா உறுப்பினர்கள் வேலை நிறுத்தம் செய்தது குறித்து அமைச்சர் தொண்டமான் மீது விசாரணை நடத்தப்படும் என்ற தோரணையிலும் திரு செல்லச்சாமியின் அறிக்கை அமைந்துள்ளது.

ஏழு மாகாணசபை உறுப்பினர்களின் உறுப்புரிமையை இடைநிறுத்தஞ் செய்வது என்ற தொண்டமானின் முடிவு ஒரு பக்கச் சார்பானது என்றும் அநியாயமானது என்றும் திரு. செல்லச்சாமி குற்றஞ்சாட்டினார்.

உறுப்புரிமையைத் தடை செய்யும் கடிதத்தில் கையெழுத்திடும் அதிகாரம் தமக்கு இருக்கையில், தொண்டமான் பொதுச்செயலாளரின் அதிகாரங்களைப் பறித்தெடுத்து விட்டார் என்றும் செல்லச்சாமி குற்றஞ் சாட்டினார்.

53 வருட பழைமை வாய்ந்ததும் —

10 லட்சம் உறுப்பினர்களைக் கொண்டதும் — பல ஆண்டுகளாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து செயற்பட்டு வந்ததுமான — இ.தொ.கா, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திஸநாயக்காவுக்கு ஆதரவளிக்க எடுத்த முடிவு குறித்து பெரிதும் பதற்றமும் கலக்கமும் அடைந்தவராகத் திரு. செல்லச்சாமி செய்தியாளர் மாநாட்டில் காணப்பட்டார். (அ-எ-6)

### மத்திய மாகாண சபை:

## சர்ச்சைக்குரிய ஏழு பேரையும் இ.தொ.கா. இடை நிறுத்தியது

கொழும்பு, டிச 25

மத்திய மாகாண முதலமைச்சருக்கு எதிராக சமீபத்தில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்த்து வாக்களிக்கப் போவதாக அறிவித்த சர்ச்சைக்குரிய ஏழு இ.தொ.கா.உறுப்பினர்களையும் கட்சியில் இருந்து காங்கிரஸ் தலைமைப்பீடம் இடைநிறுத்திவைத்துள்ளது

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்று இ.தொ.கா தலைமைப் பீடம் அறிவித்திருந்தது

ஆனால் பிரஸ்தாப ஏழு உறுப்பினர்களும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக— அதாவது ஆளும் கட்சிக்கு ஆதரவாக —வாக்களிக்கப் போவதாகச் செய்தியாளர் மாநாட்டில் அறிவித்திருந்தனர்.

இவர்கள் எழுவரும் ஐ.தே.க.வுக்கு ஆதரவான, செல்லச்சாமி அணியைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

இதனிடையில்— இ.தொ.கா. தேசிய சபை அடுத்த மாதம் 2ஆம் திகதி கூடி நிலைமையை ஆராயவுள்ளது. (ஒ-எ)

## எம் துன்பங்களுக்கு எல்லாம் ஒரு விடிவு காலம் உண்டு

### யாழ். ஆயர் நத்தார்ச் செய்தி

யாழ்ப்பாணம், டிச 25

எமது துன்பங்களுக்கு எல்லாம் ஒரு விடிவுகாலம் உண்டு என்ற நம்பிக்கையை கிறிஸ்துவின் பிறப்புக்காலம் எமக்கு நினைவூட்டுகிறது.

யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை நத்தார் தினத்தையொட்டி விடுத்த செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

விமானக் குண்டு வீச்சுக்களினால் ஏற்படும் உயிர்ச் சேதங்கள், உடைமைச் சேதங்களின் மத்தியில் நாம் மீண்டும் ஒரு முறை கிறிஸ்து பிறப்புக் காலத்தை சந்திக்கின்றோம்.

''எமக்கு ஒரு பாலன் பிறந்துள்ளார். எமக்கு ஒரு குமாரன் தரப்பட்டார் அவர் அமைதியின் இளவரசர் என அழைக்கப்படுவார்'' என்ற இசையாஸ் இறைவாக்கினரின் செய்தி எமக்கு நம்பிக்கை அளிப்பதாக இருக்கிறது.

புனித சூசையப்பர் போன்று எமது குடும்பத் தலைவர்களில் பலர் தமது குடும்பத்தைக் காப்பாற்ற வழியறியாது ஏங்கி நிற்கின்றனர்.

மரியன்னையைப் போன்று பல தாய்மார்கள் பசி, பட்டினி, வறுமை, அங்கலாய்ப்புக்களை தமக்குள் தாங்கியவர்களாக வாய் பேசாத மௌனிகளாகத் துன்புறுகின்றனர்.

ஆனால் இவை எல்லாம் ஒரு நாள் முடிவுறும்.

(4ஆம் பக்கம் பார்க்க)

### மூச்சந்தி முரளி



தொண்டாவை விழுத்திப் போட்டு உவர் செல்லச்சாமி இ. தொ.காவை கட்டி ஆளலாம் எண்டு கனவு காணுறார் போலை.

## இந்திய நிதி அமைச்சர் திடீரென ராஜினாமா!

இந்திய மத்திய அமைச்சரவையில் இருந்து நிதி அமைச்சர் டாக்டர் மன்மோகன்சிங் ராஜினாமாச் செய்துவிட்டார்.

அவரது ராஜினாமாக் கடிதம் தற்போது பிரதமர் நரசிம்மராவின் பரிசீலனையில் இருப்பதாக அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பங்குப் பத்திர மோசடி பற்றிய பேர ஊழல் தொடர்பாக விசாரித்த கூட்டு நாடாளுமன்றக்குழு அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் இந்த ஊழலுக்கு நிதி அமைச்சும் இந்திய ரிசர்வ் வங்கியும் பொறுப்பேற்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து நிதி அமைச்சர் பதவி விலகவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரி வந்தன. (ஆ-எ)

## இன்றும் நாளையும் படகு சேவை இல்லை

யாழ்ப்பாணம், டிச. 25

கிளாலி—பூநகரிப் படகுச் சேவை ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி இன்றும், நாளையும் நடைபெறமாட்டாது என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் நேற்றிரவு அறிவித்தனர்.

படகுச் சேவை இனி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, நேற்று படகுச் சேவை இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## குடாநாட்டுக்கு அவசரமாக மா எடுத்துவர ஏற்பாடு

### 'மாஹோ' கப்பல் திருமலை செல்லும்

யாழ்ப்பாணம், டிச. 25

குடாநாட்டில் நிலவும் மா தட்டுப்பாட்டை நீக்க அவசர ஏற்பாடாக, தற்சமயம் பருத்தித்துறையில் பொருள்கள் இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ''மாஹோ'' கப்பல் மூலம் திருகோணமலை பிரீமா ஆலையில் இருந்து 4 ஆயிரம் மெற்றிக் தொன் மா எடுத்துவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பருத்தித்துறையில் மண்ணெண்ணெய் பரல்களை இறக்கிக் கொண்டிருக்கும் இக்கப்பலில், இறக்கும் வேலைகள் பெரும்பாலும் நாளை ஞாயிற்றுக்கிழமை முடியலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொருள்கள் இறக்கி முடிந்ததும் திருகோணமலை செல்லும் இக்கப்பல் 4 ஆயிரம் மெற்றிக் தொன் மாவை ஏற்றிக்கொண்டு ஒருவாரத்தில் மீண்டும் பருத்தித்துறைக்கு வந்துசேரும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3-5)

## கோமாரி மீண்டும் சேவையில்; மண்எண்ணெயுடன் வரும்

யாழ்.மாவட்டத்துக்கு மாதாந்தம் ஒதுக்கப்பட்ட டிசம்பர் மாதத்துக்குரிய கோட்டாவான 4 ஆயிரத்து 500 பரல் மண்எண்ணெயுடன் 'கோமாரி' கப்பல் அடுத்தமாத முற்பகுதியில் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது

வடபகுதிக்கான சேவையை இடை நிறுத்தியிருந்த 'கோமாரி' கப்பலை மீண்டும் சேவையில் அமர்த்தியே இந்த மண்எண்ணெயை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ் அரச அதிபருக்கு தகவல் அனுப்பப்பட்டுள்ளது.

''மாஹோ'' கப்பல் யாழ் மாவட்டத்துக்கு அவசர தேவையான மாவை திருகோணமலையில் இருந்து பருத்தித்துறைக்கு எடுத்து வர வேண்டியுள்ளதாலேயே மாற்று ஏற்பாடாக 'கோமாரி' கப்பல் அமர்த்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஒ-32-5)

## யாழ், பல்கலை அனுமதி: அரைவாசி மாணவரே பதிவு

யாழ். பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்ற 417 மாணவர்களில் சுமார் அரைவாசி மாணவர்களே தமது பதிவுகளை நேற்று முன்தினம் வரை மேற்கொண்டுள்ளதாக யாழ். பல்கலைக்கழக பதிவாளர் திரு. தே. பரமேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்துக்கு ஆயிரத்து 180 மாணவர்களை அனுமதிக்குமாறு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடம் கேட்கப்பட்டபோதும் —

417 மாணவர்களையே யாழ். பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்குமாறு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு பணிப்புரை வழங்கியிருந்தது.

ஆனால் நேற்று முன்தினம் வரை 249 மாணவர்களே தமது பதிவுகளை மேற்கொண்டுள்ளதாகவும் —

இதனால் புதுவருட வகுப்புக்கள் ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டு வருவதாகவும் — அவர் தெரிவித்தார்.

பதிவு செய்வதற்கான கால எல்லை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (த-3)

## புதிய அவசரகால விதிகள்; அரசு மீது பலத்த கண்டனம்

கொழும்பு, டிச. 25

மலையகத்தில் தோட்டத் தொழிலாளர் அண்மையில் வேலை நிறுத்தம் செய்ததை தொடர்ந்து கடுமையான அவசரகாலச் சட்ட ஒழுங்கு விதிகளை பிறப்பிப்பதற்காக சுதந்திரத் தகவல்துறை நிறுவனம் அரசை வன்மையாகக் கண்டித்துள்ளது.

புதிய அவசரகால விதிகள் பத்திரிகைச் சுதந்திரத்தை வெகுவாக ஒடுக்கக்கூடியதாக உள்ளன. இந்த அசுரத்தனமான அவசரகாலச் சட்ட விதிகளை நாட்டில் அமுல் நடத்த என்ன அவசியம் ஏற்பட்டு விட்டது என்றும் அந்த அமைப்புக் கேட்டுள்ளது. (ஒ-எ)

## மட்டு. தமிழ்க் கிராமம் இரவில் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், டிச. 25

மட்டக்களப்பு மாவட்டத்தின் பாளையடி வெட்டையில் நிலைகொண்டுள்ள ஸ்ரீலங்கா விஷேட அதிரடிப்படையினர் பலாச்சோலை கிராமத்தை கடந்த திங்கட்கிழமை இரவு 9 மணியளவில் சுற்றி வளைத்தனர்.

அங்கு தேடுதல் நடத்திய அதிரடிப்படையினர் பல தமிழ்மக்களை கைது செய்து அவர்களை கடுமையாகத் தாக்கினர்.

அதன்பின் இருவர் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். ஏனையோர் விடுதலை செய்யப்பட்டனர்.

மறு நாள் காலை 9.30 மணியளவிலும் அதிரடிப் படையினர் பலாச்சோலை கிராமத்துக்குச் சென்று வீதியால் சென்ற மக்களைப் பிடித்து கண் மூடித்தனமாகத் தாக்கினர்.

அவர்களில் இருவரை கைது செய்து முகாமுக்கு கொண்டு சென்று அங்கேயும் சித்திரவதை செய்தனர் என்று அறிவிக்கப்படுகிறது. (ஒ-3)

### நத்தார் நல்வாழ்த்துக்கள்



வாசகர்கள் விளம்பரதாரர்கள், செய்தியாளர்கள், எழுத்தாளர்கள் விநியோகஸ்தர்கள் மற்றும் ஆதரவாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும் உதயனின் நத்தார் நல்வாழ்த்துக்கள் உரியனவாகுக.

### ஜி.சீ.ஈ. சாதாரண தர பரீட்சை

## விடைத்தாள்களை கப்பலில் அனுப்புமாறு பணிப்பு

யாழ்ப்பாணம், டிச. 25

கடந்த 15 ஆம் திகதி நடந்து முடிந்த ஜி. சீ. ஈ. (சாதாரண) தரப் பரீட்சை விடைத்தாள்களை தற்சமயம் பருத்தித்துறையில் தரித்துள்ள 'மாஹோ' கப்பல் மூலம் திருகோணமலைக்கு அனுப்புமாறு பரீட்சை ஆணையாளர் யாழ். செயலகத்துக்கு தகவல் அனுப்பியுள்ளார்.

'மாஹோ' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கி முடிக்கப்படும் பட்சத்தில் நாளை அல்லது நாளை மறுதினம் திருகோணமலைக்குச் செல்லும் இக்கப்பலில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் ஒருவருக்கு மரண தண்டனை!

யாழ்ப்பாணம், டிச. 25

திருகோணமலை மாவட்டத்தில் பல அட்டூழியங்கள் புரிந்த துரோகி ஒருவருக்கு நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளால் மரணதண்டனை வழங்கப்பட்டது.

பள்ளிக்குடியிருப்பு தங்கபுரம், மூதூரைச் சேர்ந்த செல்வன் என்று கூறப்படும் நாராயணன் செல்வன் என்பவருக்கே மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது

பள்ளிக்குடியிருப்பு ஸ்ரீலங்கா இராணுவ முகாமுக்கும் தோப்பூர் ஸ்ரீலங்கா பொலீஸ் நிலையத்துக்கும் இடையில் வைத்து இவருக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டதாகப் ''புலிகளின் குரல்'' வானொலி அறிவித்தது. (ஒ-3)

### இடம் பெயர்ந்தோர் நிவாரணம்

## முதல் இரு வாரங்களுக்கு அரிசியும் சீனியும் மட்டுமே

யாழ்ப்பாணம், டிச. 25

இடம்பெயர்ந்தோருக்கான டிசம்பர் மாத முதல் இருவார நிவாரணமாக அரிசியும், சீனியும் மட்டுமே வழங்கப்படவிருப்பதாக யாழ். செயலக புனர் வாழ்வுப் பிரிவு தெரிவித்தது.

மா மற்றும் பருப்பு வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் அரிசி, சீனி ஆகியவற்றை மட்டுமே நிவாரணமாக முதல் இரு வாரமும் வழங்கவும் —

ஏனைய இரு வாரங்களுக்கு மா, பருப்பு வகைகளை கூடுதலாக வழங்கவும் — ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை — இடம் பெயர்ந்தோருக்கு நிவாரணம் வழங்குவதற்கான முத்திரைகள் வந்து சேராததால், முந்திய முத்திரைகளில் பதிந்துவிட்டு நிவாரணம் வழங்குமாறு ப.நோ.கூ. சங்கங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஒ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
192/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## நத்தார் சிந்தனை

இன்று நத்தார் தினம். பாலன் யேசு அவதரித்த இந் நாளை உலகெங்கும் வாழும் கிறிஸ்தவப் பெருமக்கள் ஆராதனைகளுடனும் கொண்டாட்டங்கள், விருந்துகளுடனும் களிப்பர்.

இருள் சூழ்ந்த காலத்தில் உதித்த யேசுபிரான் மக்கள் வாழ்வில் ஒளியேற்றியவர். அதனால் அவர் மக்கள் இரட்சகராகக் கருதப்பட்டார்; இன்றும் கருதப்படுகிறார்.

தெய்வத்தின் மனித வடிவமே யேசு என்று சொள்ளப்படுகிறது. அதற்கும் மேலாக அவர் ஒரு புரட்சிவாதியாகத் திகழ்ந்தார். விடுதலை வீரராக மிளிர்ந்தார். மக்கள் நல்வாழ்வுக்கும் விடுதலைக்கும் தன்னையே அர்ப்பணித்த தியாகியாக வாழ்ந்தார். மக்கள் தொண்டனாகவே பணியாற்றினார். இன்னல் உற்ற மக்களுக்கு வாழ்வையும், சமாதானத்தையும் தேடிக் கொடுத்தார்.

அவரது இத்தகைய பன்முகப்பட்ட குணவியல்புகளால் அவர் ஒடுக்கப்பட்டவர்களுக்கும், அடக்கப்பட்டவர்களுக்கும், விடுதலை தேடிக் கொடுத்தார். உரிமைகளை இழந்திருந்தவர்களுக்கு உரிமை வாழ்வளித்தார். அவர்கள் வாழ்வை மேம்படுத்தினார். இறைவழிக்கு நெறிப்படுத்தினார்.

ஆகையால் அவர் உலகத்துக்கு ஓர் உதாரண புருஷராக உயர முடிந்தது. அமைதி குலைந்து, நிம்மதி இழந்து, குழப்பங்களும், பூசல்களும் மலிந்துள்ள இன்றைய உலகத்திற்கு இறைமகன் யேசுவின் வாழ்க்கை ஓர் முன்னுதாரணம்.

அதேபோல—

ஈழத் தமிழ் மக்கள் இன்றுள்ள நிலையில் யேசுவின் வாழ்க்கை, குணப்பண்புகள், போதனைகள் பெரிதும் வேண்டற்பாலன; கடைப்பிடிக்கப்படவேண்டியன.

தமிழ் மக்கள் ஒடுக்கப்பட்டவர்களாக, அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டவர்களாக வாழ நேர்ந்துள்ளது. ஆகையால் அவர்கள் உரிமை பெற்றவர்களாக, விடுதலை வாழ்வை நாடிப் போராட வேண்டிய தவிர்க்கமுடியாத தேவை உண்டு.

அதனால் யேசுவின் போராட்ட வாழ்வை தமிழர்கள் தமது வாழ்வில் கடைப்பிடிக்கவேண்டிய அவசியம் எழுந்துள்ளது. யேசு மக்கள் தொண்டனாக வாழ்ந்தார். தமது சீடர்களின் பாதங்களைக் கூடக் கழுவினார். மக்கள் மேம்பாட்டுக்காகத் தியாகம் செய்தார். சிலுவையைச் சுமந்து இரத்தம் சிந்தினார்.

அநீதியையும் அடக்குமுறையையும், அடிமைத்தனையையும் நீக்குவதற்காகவே, மக்களின் சுதந்திர வாழ்வுக்காகவே; அவர் புரட்சியாளன் ஆனார்; போராளியாகினார்; தியாகியாகினார்.

ஈழத் தமிழர்கள் இந்த மூன்று பாத்திரங்களாகவும் மாற வேண்டியுள்ளது; வாழ வேண்டியுள்ளது. புரட்சி, போராட்டம் ஆகியவற்றுக்காகத் தியாகியாக மட்டுமன்றி மக்கள் தொண்டனாகவும் யேசு வாழ்ந்தார். மக்களிடமே இறைவனைக் கண்டார். மக்கள் நேயம் மிகுந்தவராக விளங்கினார். உன்னைப்போல் அயலானையும் நேசி என்ற அவரது அறிவுரை அந்த மனித நேயத்தின் பால் பிறந்ததே.

இராணுவ நடவடிக்கைளால் எங்கள் சகோதரர்கள் பலர் இடம் பெயர்ந்து அல்லற்படுகிறார்கள். உணவு மற்றும் சுகாதார வசதிகள் இன்றி துன்பமுறுகிறார்கள் அவர்களுக்குக் கைகொடுத்து உதவ நான்காவதான மனித நேயத்தைப் பேண வேண்டும்.

மொத்தத்தில் ஈழத்தமிழர்கள் சுதந்திர வாழ்வை அனுபவிக்க வேண்டுமாயின், அடக்குமுறைக்கு எதிராகப் புரட்சி செய்பவராக, விடுதலைக்காக உழைக்கும் போராளிகளாக, மக்கள் விடிவுக்காகத் தங்களை அர்ப்பணிக்கும் தியாகிகளாக, தமது சொந்த மக்களுக்குத் தொண்டு புரியும் மனித நேயர்களாக — நான்கும் பொருந்தியவராக மாற வேண்டும்.

இன்றைய நத்தார் தினத்தில் அதனை மனதில் இருத்தி உழைத்தால், விடுதலையும் விடிவும் விரைந்து பிறக்கும். அவற்றைப் பின் தொடர்ந்து சமாதானமும் வரும்.

# யேசு கொணர்ந்த சமாதானம் எங்களோடு
# விடுதலைக்காக உழைப்பது எமது கடன்

நத்தார் புதுவருடம் அண்மித்ததும் கிறிஸ்தவ நண்பர்கள் ஒருவருக்கொருவர் சமாதான சந்தோஷ வாழ்த்துக்கள் பரிமாறுவர். கொடூரமான போரின் மத்தியில் சமாதான வாழ்த்துக்கள் ஒலிக்கும். அழிவுகள், அனர்த்தங்கள் மத்தியிலும் சந்தோஷ வாழ்த்துக்கள் ஒலிக்கும். விம்மி அழுகின்றவர் கூட "ஹப்பி கிறிஸ்மஸ்" என்று கை கோர்க்கிறார்கள்.

பசிபட்டினியால் வாடுபவர்களும், இந்நாளில் நத்தார் வாழ்த்துக்களைத் தெரிவிப்பர். இதன் மர்மம் என்ன? இப்படி செய்வது வார்த்தைக்கும் வாழ்க்கைக்கும் இடையிலான முரண்பாட்டை மறைக்கும் போலி வாழ்த்துக்களா? அல்லது நம்பிக்கை இழந்த கொடூரத்தின் மத்தியிலும், நம்பிக்கையுடன் எழும்பும் நேரான சீரான விசுவாசவார்த்தைகளா?

நாம் நினைவு கூரும் பிறப்பு ஓர் வெறும் மனிதனுடைய பிறப்பு விழா மாத்திரமல்ல. அப்பிறப்போடு இணைந்த இறைவன் அவதாரமுமே ஆகும். இப்பிறப்பில் உதித்தது மனிதனும் மனிதனை முழுமையாக விடுவிக்கும் இறைவனும். ஆகையினால் இப்பிறப்பு விழா மனித இனத்தின் முழுமையான விடுதலையின் பிறப்பு விழாவாகக் கருதப்பட வேண்டும்; கொண்டாடப்பட வேண்டும்.

யேசுவில் உதித்தது முழு மனித விடுதலையென்றும், அவர் மரணத்தினூடான உயிர்ப்பில் வென்றது கிறிஸ்துவின் விடுதலை வெற்றி என்றும் நாம் விசுவாசிக்கிறோம். மனிதனின் முழு விடுதலை, பாவத்தினூடாக வந்த சகல அடிமைத்தனங்களையும் சார்ந்தது இறைவனுக்கும் மனிதனுக்கும் எதிரான தனி மனிதனின் பாவங்கள் சரி, (Individual Sins) இறைவன் அமைப்புக்கும் மனித அமைப்புக்கும் எதிரான பாவங்கள் சரி (Social Sins) அனைத்தையும் அழித்து நிலையான பண்பைக் கொண்ட புதியதொரு இறை அரசைத் தான் யேசுக் கிறிஸ்து ஆரம்பித்து வைத்தார். இம்முழு விடுதலையையும் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் கொண்ட அரசை நோக்கித் தான் திருச்சபையும் அதன் அங்கத்தினரான கிறிஸ்தவர்களும் பயணம் செய்கின்றனர்.

ஆகையால் கிறிஸ்தவன், கிறிஸ்து கொணர்ந்த முழு மனித விடுதலையையும் நோக்கி வீறுநடை போடும் பயணி ஆவான். அவ்விடுதலைக்காக ஏங்கி நின்று தன்னாலான சகலத்தையும் செய்ய ஆவியினால் உந்தப்பட்ட செயல் வீரனும் ஆவான்.

இம்முழு மனித விடுதலையின் கண்ணோட்டத்தில் தான், இன்று தமிழரை எதிர் நோக்கியிருக்கும் சகல விடுதலைப் போராட்டங்களையும், விசேடமாக அரசியல் விடுதலைப் போராட்டத்தையும், நோக்க வேண்டும்; கணிக்க வேண்டும்; பங்கெடுக்க வேண்டும்.

மனிதனின் முழு விடுதலைக்காக உதித்த கிறிஸ்துவைப் பின்பற்றும் நாமும், எமக்குரிய கண்ணோட்டத்திலும் நெறி முறையிலும் விடுதலைக்காக ஏங்குவதும், ஆசிப்பதும் உழைப்பதும் எமது கடன்.

கிறிஸ்தவர்கள் கிறிஸ்து கொணர்ந்த நீதி, நேர்மை, சமாதானம் அடங்கிய விடுதலைக்காகப் போராடுவதில் முன் அணி செல்வாராக.

வண பிதா எஸ். ஜே. இம்மானுவேல்.
குரு முதல்வர்
யாழ் மறை மாவட்டம்

## ஆசி வழங்க வந்தார்!

தீராத துன்பங்கள் நீக்க வந்தார்
திருவுறை ஒளியினருள் சொரியவந்தார்
பாரெங்கும் நன்னீதி வழங்க வந்தார்
பரவிவரும் நோய்பிணிகளகற்றவந்தார்
காருண்ட மேகத்தின் வீறுற்ற புயலாலே
கலங்கியழும் மக்களைத் தேற்ற வந்தார்
சீரற்ற வாழ்க்கையால் சோர்வுற்ற தமிழர்க்குச்
செங்கரத்தி னாசியினை அளிக்க வந்தார்.

— ஆ. சவரிப்பிள்ளை

## உன்னருள் எமக்குப் பொழிவீரே!

மார்கழி மதியில் மாகுளிர் வேளை
மாட்டடை குடிலில் மாபரனாக
மாமரி மகனாய் மாநில மீதில்
மாசுதனே நீர் வந்துதித்தீர்

இன்னல்கள் எம்மை நெருங்கிடும் வேளை
உன்னதனே எம்மை நோக்கிடுவீரே
துன்பங்கள் யாவையும் நீக்கிடுவீரே
உன்னருள் எமக்குப் பொழிவீரே.

— தா. சசியானி

## இறைமகன் யேசு!

மானிட உருவில்
தேவ குமாரன்
மண்ணில் அவதரித் தார்
வானுள தூதர்
ஆயர்கள் மக்கள்
வாழ்த்தி வணங்கி நின்றார்!

பாரச் சிலுவை
முடிமுன் தாங்கிப்
பரம பிதா நடந்தார்!
பாவி எமை
மீட்க என்றே
பலவாய்த் துயர் சுமந்தார்!

— நெடுந்தீவு லக்ஸ்மன்

## மானுடத்தைக் காப்பதற்கு மண்மீது வாரீரோ!

பெத்தலகேம் நகரை பெருமைசெய்த பாலகனே
பெருநாளாம் இந்நாளில் பிறப்பெடுத்து வாரீரோ,
கன்னிமரியாள் பெற்றெடுத்த கர்த்தரே யேசுவே!
கவலைகள் தீர்த்துஎமைக் கண்திறந்து பாரீரோ!
இப்பிறப்பின் பாவங்களின் இருள்போக்கும் -
இரட்சகரே!
இன்பஅலை பொங்கிடவே இன்றிறங்கி வாரீரோ,
மக்களுக்காய் அன்று மரச்சிலுவை சுமந்தவரே!
மானுடத்தைக் காப்பதற்கு மண்மீது வாரீரோ!
சாட்டையால் அடிகொண்ட சத்தியத்தின் போதகரே!
சாந்தியுடன் சமாதானம் சமத்துவமும் தாரீரோ!

— வண்ணை செ. சாயிப்பிரியன்

## புரட்சிக்குப் பூத்த பூ

மார்கழி மாதம் 25ஆம் திகதி புரட்சிக்குப் பூத்த பூ. யேசு பிறந்த நாள்.

யேசு பகைமையை பாசத்தால் வென்றிட, பழிக்குப் பழிவாங்கும் தன்மையை மன்னிப்பால் மாற்றிட, தானே துய்க்கவேண்டும் என்ற தன்மையை நீக்கிப் பிறருடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற பண்பு மக்களிடம் வளர்ந்திட புதியதோர் புரட்சிப் போதனை போதித்து அதன்படி வாழ்ந்து காட்டினார்.

மனிதனைத் தெய்வமாக்க யேசு வடிவத்தில் தெய்வம் மனிதனாக வந்தது

யேசு தமது திருமேனியை உலக மக்களின் நலனுக்காக இரத்தக் குளத்தில் நீராடச் செய்தார். மற்றவர்களின் இரத்தத்தில் அல்ல; தமது சொந்த இரத்தத்தில்,

-மரியசிசில் இன்பராஜன்.

## அல்லற்படும் மக்களுக்கு உதவி யேசு விழாவைக் கொண்டாடுவோம்

ஒடுக்கப்பட்டவர்கள், உரிமைகள் மறுக்கப்பட்டவர்கள், ஊரைவிட்டே தாம் வாழ்ந்த இல்லங்களை விட்டே ஓட ஓடத் துரத்தப்பட்டவர்கள், அடைக்கலம் புகாவண்ணம் தடுத்து நிறுத்தப்பட்டவர்கள், வாழ்விழந்து வழியிழந்து சொந்தக் குடும்பம் என்று ஒன்றுகூட இல்லாத நிலையில் துரத்தியடிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் மீட்பைக் கொண்டு வரவே யேசு அவதரித்தார்.

இந்த உண்மையை நன்கு புரிந்து கொண்டு நாம் கிறிஸ்துமஸ் விழாவைக் கொண்டாட வேண்டும்.

மேலும், உன் சகோதரர்களுக்கு உதவும் போதெல்லாம் எனக்கே அந்த உதவிகளைச் செய்கிறீர்கள் என்று யேசு பிரான் கூறியுள்ளார். எனவே அவரின் கூற்றிற்கு இணங்க வறுமையில் வாடும் அயலவர்களுக்கும், சூழ்நிலை காரணமாக, தமது சொத்துச் சுகம் எல்லாவற்றையும் இழந்து அகதிகளாக இடம்பெயர்ந்து, இருக்க இடமோ, உடுக்க உடையோ இன்றி அல்லல்படும் எமது சகோதரர்களுக்கும் பொம்பர், ஷெல்தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டு, மருத்துவமனைகளில் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும் அப்பாவிகளுக்கும், நம்மால் இயன்றளவில் இயன்ற விதத்தில் உதவி செய்து, இம்முறை யேசு பிறப்புவிழாவை ஓர் அர்த்தம் உள்ள விழாவாகக் கொண்டாடி மகிழ்வோமாக!

- கப்டன் டி. ஏ. எம். குணசிங்கம் -

## நாளை மணிவிழா

யாழ் இந்துக் கல்லூரி பிரதி அதிபர் கப்டன் என். சோமசுந்தரத்தின் மணி விழா நிகழ்ச்சிகள் நாளை ஞாயிறு மாலை 5 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மணிவிழாவை யொட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கண்காட்சி உதைபந்தாட்டம் நாளை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். அதனைத் தொடர்ந்து விழா நாயகர் பிற்பகல் 4 மணிக்கு விழா மண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்து வரப்படுவார் தொடர்ந்து திரு. எஸ். டிவகலாலா தலைமையில் விழா நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

தவத்திரு சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், வண பிரான்ஸிஸ் ஜோசப் அடிகள் வாழ்த்துரை வழங்குவர். நயப்புரையை விடுதலைப் புலிகள் இயக்க பிரமுகர் திரு. வெ. இளங்குமரன், உட்பட மற்றும் பலர் வழங்குவர்.

## திருகோணமலையில் சிங்கள பாடசாலைகளின் அபிவிருத்தியில் அரசு தீவிரம்

திருகோணமலையில் உள்ள சிங்களப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக பெருமளவு நிதிகளை இப்பாடசாலைகளுக்கு அரசு ஒதுக்கியுள்ளது.

இதேவேளை — அங்குள்ள தமிழ்ப் பாடசாலைகள் பல வழிகளாலும் புறக்கணிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது (த-எ)

## ஆங்கில சுருக்கெழுத்தாளர்

கொழும்பு, டிச 25

தேசிய கல்வி ஆணைக்குழு ஆங்கில சுருக்கெழுத்தாளர் தரம் ஒன்று பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்களை கோரியுள்ளது.

ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்த 40 வயதுக்கு உட்பட்டோர் இதற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவு திகதி ஜனவரி 10 ஆகும்

## இலங்கையில் உற்பத்தி அளவு வீழ்ச்சி அடைகின்றது!

கொழும்பு, டிச 25

இலங்கையில் உற்பத்தி அளவு வீழ்ச்சி அடைந்து வருகிறது.

வியாபார, முகாமைத்துவ தேசியக் கல்லூரி இயக்குநர் மொற்சுபி பலஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முன்பு இந்தியா, பாகிஸ்தானைவிட உற்பத்தித்துறையில் முன்னணியில் நின்ற இலங்கை இன்று அந்த நாடுகளுடன் சமநிலைக்கு இறங்கி விட்டது. இந்த நிலை நீடிக்குமானால் இன்னும் மோசமான நிலைக்கு நாடு தள்ளப்படும் என்று அவர் கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

யுத்தத்தில் அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளதும் இதற்கு ஒரு காரணமாகும் என்றும் அவர் கூறினார். (த-எ)

## காய்ச்சல் பரவுகின்றது

கடந்த சில தினங்களாகப் பெய்த பெரு மழையையடுத்து வடமராட்சிப் பகுதியில் காய்ச்சல் நோய் வேகமாகப் பரவி வருகின்றது.

புளு காய்ச்சல், நெருப்பு (தைபொயிட்)க் காய்ச்சல், மூளை மலேரியா மற்றும் மலேரியா போன்ற பலவித காய்ச்சலினால் பெரும் எண்ணிக்கையானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மூளை மலேரியா, மலேரியா காய்ச்சல் ஆகியவற்றால் பீடிக்கப்பட்டவர்களே அதிகம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை — வடமராட்சிப் [illegible] நீர்ச்சிரங்கு நோயினாலும் பலர் பீடிக்கப்பட்டுள்ளனர்.

## நாளை

நாளை ஞாயிற்றுக்கிழமை [illegible] நல்லை ஆதீனக் குருமூர்த்த [illegible] முற்றோதல் நிகழ்ச்சி நடைபெறும். (த)

நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகுக!
கண் பரிசோதித்து கண்ணாடி கொடுப்பவரும் பல்கட்டுபவரும்
D. சேனாதிராஜா
இல 4 பருத்தித்துறை வீதி,
(ஆஸ்பத்திரிச் சந்தி)
யாழ்ப்பாணம்.
(சி-6825)

நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்
சகல விதமான மூக்குக் கண்ணாடி வகைகளுக்கும்
எரிக் கணேஷ்
556, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
(சி 6826)

அன்பர்கள் வாடிக்கையாளர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்
ஞானம்ஸ் ஞானம்ஸ்
ஸ்ரூடியோ ஹோட்டல்
301, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-6827)

வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும்
எமது உளம் கனிந்த
நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்
மலிவு விற்பனை வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க 14-01-1994 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.
லைடன்
புடைவை நிலையம்
249, மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம்.
(சி-6830)

★ ஆசிரியர்கள்
★ மாணவர்கள்
★ அரச தனியார் நிறுவனங்கள்
★ ஊழியர்கள்
★ வர்த்தக வாடிக்கையாளர்கள்
★ அன்பர்கள்
★ ஆதரவாளர்கள்
யாவருக்கும்
எங்கள் இதயம் கனிந்த
நத்தார் புதுவருட வாழ்த்துக்களை
தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்
மிக் கைத்தொழில் நிறுவனம்
சகல மாணவர்களுக்கும் தேவையான
★ அப்பியாசக் கொப்பிகள்
★ உபகரணங்கள்
★ அலுவலக - அச்சகக் காகிதாதிகள்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்
நடராசா கட்டடம்,
26 & 26/1, சிவன் புதுவீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(சி 6764)

நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்
✲ மங்களகாமான நிகழ்ச்சிகளை வீடியோ படம் பிடிக்க
✲ பழைய. புதிய சினிமாப் பாடல்களை பதிவு செய்ய
✲ வீடியோ படக் கசட்டுகளை வாடகைக்குப் பெற
சுப்பலோ
வீடியோ ஓடியோ சென்ரர்
198/5, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-6828)

எமது வாடிக்கையாளர்கள்! அன்பர்கள்!
நண்பர்களுக்கு

எமது நத்தார்
புதுவருட
வாழ்த்துக்களை
தெரிவித்துக்
கொள்கிறோம்

வைத்திய நிபுணர்களின் ஆலோசனைக்கு அமைவாக, சுகத்துக்கும்; இளமைத் தோற்றத்துக்கும், அழகுக்கும் உரிய பற்கள், மூக்குக் கண்ணாடிகள் வேண்டுமா?
★ நீண்ட கால அனுபவமுள்ள ஸ்தாபனம்;
பி. ஜ. பெர்னாண்டோ
542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(ஆஸ்பத்திரி பிரதான வாயில முன்பாக)
(சி-6829)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Broiler இறைச்சிக் கோழிகள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (28566)

2 மாத பேட்டுக் கோழிக் குஞ்சும், விறாத்துச்சேவலும், இறைச்சிக்கோழியும் உடன் விற்பனைக்குண்டு. இல. 09, புகையிரத நிலைய வீதி, சுன்னாகம். (6755)

வீட்டுத் தளபாடங்கள், கடைக்குரிய கண்ணாடி சோக்கேஸ்கள், கோழிக்கூடு, நாய்க்கூடு, சைக்கிள், சாளி மோட்டார் சைக்கிள், தையல் மெஷின்கள், ஓகன், டலோடிகா, T. V., ஸ்ரீல் கபினெற், அம்மி, ஆட்டுக்கல், கல்உரல், பூச்சாடிகள், செரமிக், கிளாஸ் பொருள்கள் மற்றும் மின்சாரப்பொருள்கள் விற்பனைக்குண்டு. இடம்: 275, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (28575)

கோல்டன்கொமட், கைலைன் பிறவுண், லோமன் பிறவுண், வெள்ளை பேட்டுக் குஞ்சுகளும், சேவல் குஞ்சுகளும் வர இருப்பதால் ஓடர்களுக்கு முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும். திருமகள் ஸ்ரோர்ஸ், 705, கே கே.எஸ். வீதி, சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம். (28581)

லேயர் பிறிமிக்ஸ் (Layer Premix), புறொயிலர் பிறிமிக்ஸ் (Broiler Premix) மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். திருமகள் ஸ்ரோர்ஸ், இல. 705, கே. கே. எஸ். வீதி, சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். (28582)

அடை வைக்கக்கூடிய நல்ல இன கோழி முட்டைகள், பண்டம் கோழி முட்டைகள், வான்கோழி முட்டைகள், எப்போதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (28411)

## மணப்பெண்கள் தேவை

செவ்வாய்க் குற்றமுள்ள 32 வயது என்ஜினியருக்கும், 48 வயது T. Aக்கும், 37 வயது J. T. Oவுக்கும், 36 வயது Auditorக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (28569)

## 'நீம் சுகாதார தூபம்"

நீம் தூபம் நித்தம் புகைப்பதால் நுளம்புததொல்லை எமக்கில்லை. இரவில் நிம்மதியாக உறங்குகிறோம். சுகந்த வாசனை கொண்டது நீம். அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. பக்கற் விலை ரூபா 3/-. 25 பக்கற் கொண்ட அட்டை ரூபா 60/-. ''மிலக்வைற்'' (சி-6745)

## காணவில்லை

இரண்டரை மாதம் நிரம்பிய வெள்ளை பொமனேரியன் நாய்க்குட்டியை 23-12-93 தொடக்கம் காணவில்லை. கண்டவர்கள் Dr. பாலசுப்பிரமணியம், இணுவில் என்ற முகவரிக்கு தெரிவிக்கவும். (6873)

## நூல் வெளியீடு

எழுத்தாளர் சொக்கனின் ''மானத்தமிழ் மறவன்'' (சங்கிலியன் கூத்து) என்ற நூலின் வெளியீட்டு விழா நாளை ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ் இலக்கிய வட்டத் தலைவர் திரு. து. வைத்திலிங்கம் தலைமையில் வெளியீட்டு விழா நடைபெறும்.

கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை வெளியீட்டுரையாற்றுவார். மூத்த எழுத்தாளர் வரதர் நூலின் முதற் பிரதியைப் பெற்றுக் கொள்வார். (த-5)

---

வாடிக்கையாளர்கள் அன்பர்கள்
ஆதரவாளர்கள் அனைவருக்கும்
இதயம் கனிந்த

## நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

மருந்து விநியோகஸ்தர்

## சிற்றி மெடிக்கல்ஸ்

487, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம் (சி-6833)

---

## இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

பழைய,புதிய வீடியோ கொப்பிகளை
பதிவு செய்யவும் வாடகைக்கு பெறவும்
சிறந்த இடம்:

## வீடியோ ஜீவிதா

ஒட்டுமடம் சந்தி,
யாழ்ப்பாணம். (சி-6831)

---

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

'எப்பிறப்பில் காண்போம் இனி"



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 25 | 28 |
| 01 | 12 |
| 1909 | 1990 |

நயினை

### திருமதி கண்மணி கணபதிப்பிள்ளை

திதி: 25 – 12 – 1993

நன்நடைகள் நல்கியநற் தந்தையுடன் வழிநடந்த அன்னையுனைப் பின்னையும் நாம் அடையும் நாள் வேண்டுவமே!

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

174, கோயில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம். (28550)

---

ஓம்
விராட் விஸ்வப் பிரம்மனே நம

## பாசநினைவுகளுடன் 11-வது ஆண்டு நெஞ்சகலா நினைவலைகள்



| ஜனனம்: | சிவபதம்: |
|---|---|
| 09 | 27 |
| 03 | 12 |
| 1931 | 1982 |

அமரர் விஸ்வப் பிரம்மஸ்ரீ

### சிவன் முருகன் ஆச்சாரி

(முருகன் ஆபரண மஹால், சுன்னாகம்)

திதி: 25 – 12 – 1993

ஆண்டு பதினொன்று சென்றாலும்
ஆறுமோ எம் கவலை
பாடுபட்டு உழைத்தீர்
பாரினிலே மேன்மையுற
பயன் எதையும் பாராது
பரமன் தாள் சென்றீரோ
பரிதவித்து நாம் இங்கு
பாரின் மிசை வாடுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்;
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

88/27, பத்திரகாளி கோவிலடி,
வண். மேற்கு,
யாழ்ப்பாணம். (சி-2053)

---

★ நண்பர்கள் ★ அன்பர்கள் ★ வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்

## நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

வருடங்கள் யுகங்களானாலும், என்றென்றும் ரம்மியமான கலைப்படைப்புகள்
''சிறி நதியா நகை மாளிகை'' கலைப்படைப்புகள் ஒவ்வொன்றும்
உங்கள் அழகுக்கு ஓர் ஆராதனை

## சிறி நதியா நகை மாளிகை

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (சி-3832)

---

## 18ஆவது பிறந்ததின வாழ்த்து

(25 – 12 – 1993)

### செல்வன் க. பிரகதீஷ் (SEYON)

(மகாஜனாக் கல்லூரி, கணித பிரிவு உயர்தர மாணவன் - 1994)

இளவாலையை வசிப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி கணேசலிங்கத்தின் அருந்தவப் புதல்வன் பிரகதீஷ் தனது 18 ஆவது பிறந்த தினத்தை இன்று 3-00 மணிக்கு தற்காலிக வசிப்பிடமாகக் கொண்ட (கோண்டாவில் பொற்பதி விஜயராஜ் வீதி) இல்லத்தில் வெகுவிமரிசையாக கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, தம்பி, அண்ணா (கனடா) மற்றும் உறவினர், நண்பர்கள் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
நண்பர்கள்.

(28577)

---

## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 14 | 15 |
| 05 | 11 |
| 1902 | 1993 |

புங்குடுதீவு

### அமரர் வ. வே. இளையதம்பி

நினைவலைகள் நெஞ்சங்களில் மோதிக்கொள்ள
தூங்காத இரவுகளும் துக்கத்தில் ஆடி
நீங்காத உறவே நீங்கள் எமை
நீங்கிவிட்டுச் சென்றாலும்
நீங்காது எம் மனதைவிட்டு உம் இனியமுகம்
நிழலாகத் தொடர்ந்திடும் எம் உள்ளங்களில்.

— குடும்பத்தினர்.

கதிரமலை வீதி,
சுன்னாகம்,
(இலங்கை வங்கி அருகில்). [28557]

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



| மலர்வு | உதிர்வு: |
|---|---|
| 25 | 1 |
| 01 | 11 |
| 1970 | 1993 |

### செல்லையா சிறீஸ்கந்தராசா

இருபத்திநாலு வருடத்து பருவத்து பைங்குமரா
கதை சொன்னாய் கனகாலம் எங்களுடன்
கனதூரம் ஏன் சென்றாய் கதை ஒன்று சொல்லிவிடு
வாலைக்குமரனே (தம்பி) வற்றாத எங்கள் செல்வமே!
சொல்லாமல் போனாயோ? தொல்லை என-
தந்தோம் நாம்
அன்பின் பிறப்பிடமே! அறநெறியின் இருப்பிடமே!
கருணை வடிவமே! கண்மூடித்திறக்குமுன்
காற்றினில் கலந்தாயோ?
வளத்துடன் நின் குடும்பம் வாழ வேண்டுமென்று
வழி அமைக்க வெளியூர் சென்றாய்
கார் வடிவிலே காலன் உன்னைக் கவர்ந்தானோ?
கதறுகிறோம், கண்ணீர் வடிக்கின்றோம்.
ஆறாதடா இத்துயரம் அவனி முடியும் வரை
மாறாதடா இக்கவலை மண்ணில் போகும்வரை
வாடாமலர் எங்கள் தம்பி நீ
பாதியிலே உதிர்ந்ததால்
பாசமிகு உன் குலக்கொடிகள்
பாரினிலே தவிக்கிறார்கள்
பாருக்குள் நீ மடியவில்லை
பரமனடி சென்று விட்டாய்
தம்பி கனவிலாவது வாரீர் ஐயா!

உன் ஆன்மா சாந்தி பெற இறைவனை
இறைஞ்சுகிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, சகோதர, சகோதரிகள்,
மருமக்கள், மச்சாண்மார், உற்றார்
உறவினர்.

கொக்குவில் மேற்கு,
பிடாரி அம்மன் கோயிலடி,
கொக்குவில். (28574)

---

## விக்னா கல்வி நிலையம்

52, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

**93** பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு

### மீட்டல் SAT., SUN.

வகுப்புக்கள் (8-00 – 2-00)

ஆரம்பம்: **26 - 12 - 1993**
8 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — | திரு. தேவா |
| கணக்கியல் | — | திரு. S. K. பிரபாகரன் |
| அளவையியல | — | திரு. விக்கி |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| இந்து நாகரிகம் ] இந்துசமயம் ] | — | காரை. சுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — | திரு. குணராஜா |
| அரசியல் | — | திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — | திரு. சிறீதரன் |

(சி-3750)

---

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



### கப்டன் கரிகாலன் (மஞ்சு)

தர்மரெட்ணம் பிரபாகரன்

| தாயின் மடியில்: | காயக மீட்பில்: |
|---|---|
| 16 – 11 –1972 | 11 – 11 – 1993 |

பூநகரியில் வீரம் படைத்தாய் கரிகாலா!
தரணியில் காவியமானாய் புலிவீரா!
தமிழீழ நெஞ்சமதில் மஞ்சுவானாய்
சரித்திரம் படைத்திட்ட கரிகாலனானாய்.

லெப் வாசு குடும்பத்தினர்.

P. கமல்,
ஹாசன்ஸ் வோச் வேக்ஸ்,
55, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (28583)

---

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



| உருவாய்: | அருவாய்: |
|---|---|
| 12 | 22 |
| 01 | 11 |
| 1912 | 1993 |

### அமரர் நாகலிங்கம் இராமலிங்கம்

(முன்னாள் ஓய்வு பெற்ற தெல்லிப்பளை யூனியன் கல்லூரி ஆசிரியர்)

22-11-93 அன்று சிவபதமெய்திய வீமன்காமம் வடக்கு, தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் முத்தட்டுமடலேன் (செல்வராஜா வீதி), கோண்டாவில் மேற்கை தற்காலிக வதிவிடமாகக் கொண்டவருமாகிய எமது சகோதரரின் மறைவின் போது எமது துயரில் பங்கேற்றோருக்கும், பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது சகோதரரின் ஆத்ம சாந்திக்காக (25-12-93) இன்று காலை 10 மணியளவில் நடைபெறவிருக்கும் சபிண்டீகரணத்தில் பங்குபற்றுவதோடு, அதன் பின் நடைபெறும் மதிய போசனத்திலும் குடும்ப சமேதராய்க் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

நா. அம்பிகைபாகனும்,
சகோதரர்களும்.

முத்தட்டுமட லேன்
(செல்வராஜா வீதி),
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (6874)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வேலாயுதம் பராசக்தி

தையிட்டி காங்கேசன்துறையைச் சேர்ந்த வே. பராசக்தி 22 - 12 - 1993 அன்று வவுனியாவில் காலமானார்.

இவர் வேலாயுதம் (இ.போ.ச. வவுனியா) அவர்களின் அன்பு மனைவியும், சுகி, கலா, கிரி, நேசன், நரேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. திருமதி செல்லத்துரையின் அன்பு மகளும், திருமதி த. செல்வநாயகம், இளமுருகனார் (அதிபர், மாவிட்டபுரம் வடக்கு அ.மி. பாடசாலை), செல்வராசா (பொது முகாமையாளர், தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம்), பரமேஸ்வரி, கண்ணப்பநாயனார், சுந்தரமூர்த்திநாயனார், திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி சிதம்பரத்தின் அன்பு மருமகளும், தவமணி, செல்வராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 23 - 12 - 1993 அன்று வவுனியாவில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
செ. செல்வராசா
(சகோதரர்)

''திருத்தணிகை''
ஏழாலை மேற்கு,
ஏழாலை.

(6756)

### முருகேசு தியாகராசா

காரைநகர், களபூமி, சத்திரந்தையைச் சேர்ந்தவரும் தற்போது கொக்குவிலில் வசித்தவருமாகிய முருகேசு தியாகராசா காலமானார்.

அன்னார் வாரியட்பொல முன்னாள் வர்த்தகரும், நீலாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இரத்தினசிங்கம், கனகம்மா ஆகியோரின் சகோதரரும், பரமநாதனின் (சுவிஸ்) மைத்துனரும், நவமணிதேவி, சிவசுப்பிரமணியம், கமலாதேவி, சற்குணராஜா (ஜேர்மனி), உமாதேவி (ஆசிரியை, யா / நாவலர் மகா வித்தியாலயம்), சத்தியதேவி, தேவயோகேஸ்வரி, அம்பிகாவதி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நடராசா, உலகநாதன், மல்லிகாதேவி ஆகியோரின் மாமனாரும், சுகந்தன், சுகன்யா, கௌசிகன், ஜனகன், பிரபாகரன், தாட்சாயினி, சிந்துஜா, பவித்திரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26-12-93) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு.

(28537)

### டாக்டர் A. A. கந்தையா

யாழ். மாநகரசபை ஓய்வு பெற்ற பிரதம ஆயுள்வேத டாக்டர் A. A. கந்தையா 24-12-93 அன்று 239A, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் இல்லத்தில் காலமானார்.

அன்னார் புங்குடுதீவைச் சேர்ந்த காலஞ்சென்ற பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும், பராக்கிரமசிங்கம் (கனடா), இந்திராதேவி ஆகியோரின் அருமைத் தந்தையாரும், இந்திரசீலன் (சங்கரத்தை), அருந்ததி (கனடா) ஆகியோரின் அருமை மாமனாரும் பிரேம்சந்த், பிருந்தாபனன் ஆகியோரின் அன்புப் பாட்டனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் நேற்று 24-12-93 இல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

தகவல்
இ இந்திரசீலன்
(மருமகன்)

239A, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(28576)

### திருமதி வயலட் சுகிர்தம்மா சாள்ஸ்

திருமதி வயலட் சுகிர்தம்மா சாள்ஸ் கர்த்தரின் மகிமைக்குள் பிரவேசித்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற J. C. சாள்ஸ் இன் அன்பு மனைவியும், திருமதி சுகிர்தமலர், Dr. ஜெயராஜா, காலஞ்சென்ற ராஜேஸ்வரி, Dr. விஜயராஜா, தர்மராஜா, செல்வராஜா, ஜெயராணி, நவரட்ணராஜா ஆகியோரின் அருமைத் தாயாரும், C R. ராஜசிங்கம், காலஞ்சென்ற அரியம் ஆசீர்வாதம், Dr. மந்திச் செல்லையா, இன்பராணி, சுகுணாஜோதி, சீதா, வசந்தமலர், இந்திராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 24 - 12 - 93 அன்று பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லூர் பரி யாக்கோபு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
V. C T செல்வராஜா
(மகன்)

362 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(28585)

### கந்தவனம் பரமானந்தம்

மண்டைதீவை பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது வண்ணார்பண்ணை மேற்கில் வசித்தவருமான கந்தவனம் பரமானந்தம் 24-12-1993 அன்று காலமானார்.

அன்னார் சின்னத்தங்கத்தின் அன்பு கணவரும், சறோஜினிதேவி (குவைத்), வனிதாமணிதேவி, சுசீலாமணிதேவி, யாழினிதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஏகாம்பரம், (விக்னா ஸ்ரேட் சென்ரர்), அருட்குமாரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பாஸ்கரன், ஞானசேகர் (ஓமான்), சந்திரசேகர் (கொழும்பு), குணசேகர், விக்கினேஸ்வரி, பிரபாகரன், அருளினி, சிவகுமார்தாஸ் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று 25 12-93 பி.ப. 1.00 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

தகவல்;
குடும்பத்தினர்

70/1 முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை மேற்கு

(28594)


## பாலர் ஆசிரியர் பதவி

★ பாலர் ஆசிரியர் பயிற்சி சான்றிதழ் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

★ கற்பித்தல் அனுபவம் உடையவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவு: 30-12-1993**

— அதிபர்.

ESTD 1973 REGD NO ...

The Express Institute
IRUPALAI - KOPAY

(28573)



அகில இலங்கை இளங் கலைஞர் மன்றம்

## மாதாந்த இசை நிகழ்ச்சி
## 'ஒளி விழா'

(பரமன் கிறீஸ்து பிறப்பு விழா)

இடம் :- மன்றக் கலாமண்டபம்,
சட்டநாதர் வீதி, நல்லூர்

காலம் :- **26 - 12 - 1993** ஞாயிறு
மாலை **5** மணி

நிகழ்ச்சி நிரல்

★ மாலை 5-00 — 6-00
1. மங்கள இசை — வி. கே. கானமூர்த்தி, வி. கே பஞ்சமூர்த்தி குழுவினர்

★ மாலை 6-00 — 7-30
2. மங்கள விளக்கேற்றல் —
   1. சித்த வைத்தியர் ச. இராமசாமி அவர்கள்
   2. அ. ஜேசுதாஸன் அவர்கள் (அருள்ஸ் தொழிலகம்)
3. மௌன அஞ்சலி
4. வரவேற்புரை
5. வழிபாடு — புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி-யாழ்ப்பாணம்.
6. தலைமையுரை — அருட்தந்தை ஞாயில் பொன்னையா அ ம தி. (அமல உற்பவம், கொழும்புத்துறை)
7. அருளுரை — அருட்தந்தை செ. பி. நேசகுமார் (பரியோவான் ஆலயம், சுண்டுக்குளி)
8. பாடல் — சா. தேவமனோகரி, ச. டிசிலியா, ச. புனிதவதி சு. கனிஷியா, ஜி. சஜினி
9. வாழ்த்துரை — கவிஞர் சோ. பத்மநாதன் (உப அதிபர், பலாலி ஆசிரிய கலாசாலை)
10. பாடல் — த. சரளா, ஜே. ஸ்கொலஸ்ரிக்கா, வ. கோஷிடொறத்தி, மஜிழினி, விஜி
11. பிரதம விருந்தினர் உரை — அருட்தந்தை எஸ். எச். ஜெபநேசன் (இயக்குநர், மனித முன்னேற்ற நிலையம்)

★ 7-30 — 8-15
ஆக்க நடனம் — ''தேவனின் பெருமை'' (இராமநாதன் நுண்கலைக் கல்லூரி)

★ 8-15 — 9-30
நாடகம் — ''சத்தியத்தின் தரிசனங்கள்'' (தயாரிப்பு: திருமறைக்கலா மன்றம்)

விக்ரேஸ் நியு விக்ரேஸ், விக்ரர் அன் சன்ஸ் ஸ்தாபனங்களின் ஆதரவில்

கலா ரஸிகர்கள் அனைவரையும் ஒளி விழாவிற் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:
இளங்கலைஞர் மன்ற 14ஆவது ஆண்டு இசை விழா 06-02-1994 — 20-02-1994 வரை பதினைந்து தினங்கள் நடைபெறவுள்ளது. இசை விழாவில் கலந்து நிகழ்ச்சிகள் வழங்க விரும்பும் இளங்கலைஞர்களிடமிருந்து வாய்ப்பாட்டு, வயலின், வீணை, மிருதங்கம், புல்லாங்குழல், என்பவற்றில் தனி, குழு நிகழ்ச்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தங்கள் தகுதியை உறுதி செய்து 10-01-1994 திகதிக்கு முன்னர் தலைவர், இளங்கலைஞர் மன்றம், சட்டநாதர் வீதி, நல்லூர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்,

- மேற்படி மன்றத்தினர்

(இ-6725)


## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

### லெப்டினன்ட் மோகன்/எழிலரசன்

சின்னத்தம்பி - சந்திரசேகரம்

தாயின் மடியில்: 28 — 12 — 1968
தமிழீழ மண்ணில்: 11 — 11 — 1993

அன்னை மண்மீட்க அண்ணன் அணிசேர்ந்து
அந்நியன் ஆதிக்கம் நிலைத்த பூநகரியில்
உன்னை ஈகைசெய்தாயே வித்தாகி
உறைந்திட்டாய் நெஞ்சில் நிறைந்திட்டாய் மோகனே
தடை பல கடந்து படைபணி தொடர்ந்து
களம்பல வென்று மனங்களில் நிறைந்து
உடலது அனலும் உன்மன வைரம்
உடைத்தது எதிரி அணியது சிதற
அலையினை வீசி அடைந்தது வெற்றி
அந்நிய வாதிக்கம் நிலைத்த பூநகரி
புனலெனப் பாய்ந்த குருதியில் நனைந்து
பூத்தது புலியுகம் படைத்தது காவியம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியையும், 45ஆம் நினைவு நாளும் இன்று (25-12-93) அவரது இல்லத்தில் நடைபெறுகிறது. நண்பர், உறவினர் சக போராளிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

குடும்பத்தினர்.

வெற்றிக்காடு,
சரணவாய் தெற்கு.

([illegible])

### உதைபந்தாட்டம்

கோப்பாய் கோல்ட் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் கோப்பாய் வடக்கில் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ உதயசூரியன் அணி எதிர் அம்பாள் அணி

★ ஒஸ்கா அணி எதிர் செல்லப்பா அணி (ஒ-3)

### இன்று கடைகள் திறக்கப்படா

நத்தார் பண்டிகையையொட்டி இன்று வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருக்கும் என்று வர்த்தகர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ-77-154)

### இன்று ஆரம்பம்

வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு திருவாசகப் பெருவிழா ஆரம்பமாகிறது.

இன்று கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ ஜெயராஜ் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (க)

### தப்பி ஓட்டம்

சென்னை, புழலேரி அகதிகள் முகாமில் இருந்து ஒருவர் தப்பி ஓடிவிட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

300 க்கு மேற்பட்ட இலங்கை அகதிகள் இந்த முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். தப்பி ஓடியவரின் பெயர் ராஜன் என்று சொல்லப்படுகிறது (ஒ)

விடைத்தாள்களை---
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடைத்தாள்களை எடுத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இப்பரீட்சையின் விடைத்தாள்கள் புள்ளியிடும் வேலைகள் கொழும்பு மற்றும் மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா மாவட்டங்களில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டன.

யாழ். மாவட்ட விடைத்தாள்கள் தாமதமாகவே செல்வதால், இரண்டாம் கட்டமாகவே புள்ளியிடும் வேலைகள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-3)

எம் துன்பங்களுக்கு
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நமது துன்பங்களுக்கெல்லாம் ஒரு விடிவு காலம் உண்டு என்ற நம்பிக்கையை கிறிஸ்து பிறப்புக்காலம் எமக்கு நினைவூட்டுகிறது.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### இளையதம்பி வீரசிங்கம்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான இளையதம்பி வீரசிங்கம் நேற்று (24-12-93) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வைத்திலிங்கம், வேலாயுதம், மற்றும் இலட்சுமி, தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகலோகதேவி, கமலநாதன், இராஜேஸ்வரி, பத்மசோதி, ராசலிங்கம், சண்முகலிங்கம், சடாச்சரம், சதானந்தராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுருநாதன், பிரபுதிகாமணி, அம்பிகாமலர், விஜயலட்சுமி, ஜீவராணி ஆகியோரின் மாமனும், குமரகுருநாதன், திருச்சோதி, புண்ணியவதி, ஆனந்தகிருஷ்ணன், குருமூர்த்தி, ஜெயந்தி, டயாளினி, ரேணுகா, பிரதீபா, சர்மிளா, பாலசுந்தரம், விசாகன், வாமலோஜனா, பத்மலோஜனி, அனோஜினி, சாதானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரினது பூதவுடல் தகனக் கிரியைகளிற்காக இன்று (25-12-93) சனிக்கிழமை கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
சிவகுருநாதன்
(நல்லையா)
(மருமகன்)

48/5, 1ஆம் ஒழுங்கை
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(28595)


★ நத்தார் வாழ்த்து மடல்கள்
★ நத்தார் கேக் சாமான்கள்
★ நத்தார் சோடனைப் பொருள்கள்
★ நத்தார் மரங்கள், பூக்கள்
★ நத்தார் பாலன் பிறப்பு செட்
★ விளையாட்டுச் சாமான்கள்
★ எவர்சில்வர் சாமான்கள்
★ குளிர் பானம் தயாரிக்கும் சாமான்கள்
★ பான்சி, பிறசென்டேசன்
★ ஸ்போட்ஸ் சாமான்கள்

இன்னும் பல ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

## ராஜா ஸ்ரோர்ஸ்
''ராஜஸ் பில்டிங்''

67, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி 6819)



அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க

## மக்கள் வங்கி
## எழுதுவினைஞர், சுருக்கெழுத்தாளர்

போட்டிப்பரீட்சைக்கான

## விசேட பயிற்சி வகுப்புகள்

2ஆவது பிரிவு

**ஆரம்பம்: 26 12-1993**

மு. ப. 9 மணி.

பாடநெறி:
பொதுவிவேகம், மொழித்திறன்

அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களின் இணைந்த சேவை

★ சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில்
★ நாளாந்தம் 3 மணித்தியாலங்கள்
★ இலவச பாடக்குறிப்புகள்
★ 10 வகுப்புகள் - கட்டணம் ரூ 250-00

## அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்

101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகில்) (சி-6823)


## மரண அறிவித்தல்கள்

### தம்பிமுத்து அமராவதி

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி தம்பிமுத்து அமராவதி 24 12.93 இல் இறையடி எய்தினார்.

இவர் காலஞ் சென்ற தம்பிமுத்துவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற துரைசிங்கம், அன்னபூரணம் ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற பரலோகநாதன், அன்னலெட்சுமி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற சந்திரமதி, காசிப்பிள்ளை, விசுவலிங்கம், பார்வதி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 24 12 93 ல் கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார் உறவினர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்
சி. பொன்னையா
சி இளங்கோ

9 A பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி.

(28592)

### சின்னத்துரை சதானந்தன்

சின்னத்துரை சதானந்தன் (இளைப்பாறிய தபாலதிபர் கொழும்பு) காலமானார்.

அன்னார் அரியாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்துரை-செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், சரஸ்வதியின் (ஓய்வுபெற்ற தாதி உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை) அன்புக் கணவரும், ஸ்ரீகரன் (நோர்வே), ஆனந்தசெந்தூரன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், பேபி சசி (நோர்வே), பாமினி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவதர்சினி (மாணவி, ஆண்டு 12, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), செந்தூரன், ஆரூரன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற செல்லையாவின் மருமகனும், காலஞ்சென்ற கைலாயபிள்ளை, காலஞ்சென்ற திருஞானசுந்தரம், திருமதி செ. வீரலட்சுமி (லண்டன்), திருமதி போ. சரஸ்வதி, திருமதி ச. கமலாதேவி, செல்வி பரமேஸ்வரி (நோர்வே), காலஞ்சென்ற அன்னலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி யோகம்மா, திருமதி செல்லம்மா, காலஞ்சென்ற செல்லத்துரை (பொலீஸ் உத்தியோகத்தர்), பொன்னுத்துரை, சண்முகலிங்கம் (பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்), தம்பையா (கிளிநொச்சி), காலஞ்சென்ற செல்லம்மா கனகரட்ணம், காலஞ்சென்ற சின்னத்தங்கச்சி குட்டித்தம்பி, சிவஞானசுந்தரம் (கிளிநொச்சி), திருமதி அன்னலட்சுமி சிவப்பிரகாசம் (இளைப்பாறிய ஆசிரியை, யாழ். மத்திய கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும், க. குட்டித்தம்பி, செ. சிவப்பிரகாசம் (இளைப்பாறிய சித்திராசிரியர், யாழ். மத்திய கல்லூரி), திரு. திருமதி கனகரட்ணம், திரு திருமதி வேலாயுதபிள்ளை ஆகியோரின் சகலனும், த. தங்கவேல், த. சிவராஜா, பவானி, சி. திருக்கேதீஸ்வரன், குகன், திரு. மு. அருளையா (அதிபர், மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்) ஆகியோரின் மாமனாரும், திருமதி தவமலர் அருளையா (இளைப்பாறிய ஆசிரியை, மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்), க. சிவபாதம் (ஜேர்மனி), க. செல்வரட்ணம் (லண்டன்), இ. சித்ராகௌரி, கு. வாமதேவன் (நோர்வே), இ. துஷ்யந்தன் (ஜேர்மனி), இ. அனுஷ்யந்தன் (இறுதியாண்டு மாணவன் மருத்துவ பீடம்) ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (25 - 12 - 93) சனிக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சித்துபாத்தி மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகிறீர்கள்.

தகவல்;
திருமதி சரஸ்வதி சதானந்தன்

35, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை மேற்கு.

(28589)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறை.) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் [illegible] நாவலர் வீதி, 392/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 25 - 12 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org